மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி இரண்டாம் திருத்தச்) சட்ட முன் வடிவு, 1994 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்). —தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு கேளிக் கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு. மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

1994 மே 4]

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (மூன்றாம் திருத்தச்), சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு வெ நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (மூன்றாம் திருத்தச) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்,